பக்கங்கள் 15+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஐப்பசி 18 திங்கட்கிழமை 04.11.2024 | அதிர்வு 95

## தேர்தல் திகதிக்கு எதிரான வழக்கு இன்று தள்ளுபடி

நாடாளுமன்றத் தேர்தல் திகதிக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுவைத் தள்ளுபடி

02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ்., ஈ.பி.டி.பி. செய்த படுகொலைகளை விசாரிக்குமா அநுர அரசு?

### தமிழரசு வேட்பாளர் பிரகாஷ் காட்டத்துடன் கேள்வி



“இறுதிக்கட்டப் போரில் தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட படுகொலைகள் மட்டுமன்றி அதற்கு முற்பட்ட காலத்தில் கல்விமான்கள், பிரஜைகள் குழுக்களின் தலைவர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரை இராணுவம் மற்றும் இந்திய இராணுவத்துடன் இணைந்து அரச ஒட்டுக்குழுக்கள் எனத் தமிழ் மக்களால் அழைக்கப்பட்டு, அவர்கள் பயந்து நடுங்கிய தமிழ் இயக்கங்கள் படுகொலை செய்தன. தங்களுக்கு உள்ளேயே கொலைகாரர்களை வைத்துக் கொண்டு எவ்வாறு தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட படுகொலைகளுக்கு நீதி கோரி நிற்க முடியும்?

03

# திருட்டுத்தனமாக நுழைந்த சுமந்திரனுக்கு வன்னி மண் தொடர்பில் என்ன தெரியும்?








### அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தனின் வரலாறும் சொல்லவேண்டி வரும் என்கிறார் எமில்காந்தன்

(கி.வசந்தன்)

“தமிழ் மக்களின் இரத்தத்தாலும், சதையாலும் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் திருட்டுத்தனமாக உள்நுழைந்த சுமந்திரன் வன்னியில் இருக்கும் பிரச்சினைகளுக்காக எப்படி இறங்கி வருவார்.?” – என்று கோடரி சின்னத்தில் போட்டியிடும் வன்னி மாவட்ட முதன்மை வேட்பாளர் எமில்காந்தன் கேள்வி எழுப்பியதுடன், செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன் ஆகியோரது முழு வரலாறும் சொல்ல வேண்டி வரும் என்றும் எச்சரிக்கை விடுத்தார்.

வவுனியாவில் உள்ள தனது அலுவலகத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே எமில்காந்தன் இவ்வாறு தெரிவித்தார்.

02



# 80 கிலோ கஞ்சா பூநகரியில் மீட்பு!

கிளிநொச்சி, பூநகரி பகுதியில் 80 கிலோகிராம் கேரள கஞ்சாவும், மோட்டார் சைக்கிள் ஒன்றும் இன்று திங்கட்கிழமை பொலிஸா ரால் கைப்பற்றப்பட்டுள் ளன.

யாழ்ப்பாணம் இராணுவப் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவ லின் அடிப்படையில், பூந கரி பொலிஸாருடன் இணைந்து முன்னெடுத்த விசேட நடவடிக்கையில் பூநகரி – கௌதாரி முனை பகுதியிலிருந்து 80 கிலோகி ராம் கேரள கஞ்சா மீட்கப் பட்டுள்ளது.

தொடர்ந்து அப்பகுதி யில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கை யின்போது மோட்டார் சைக்கிள் ஒன்றையும் பொலிஸார் கைப்பற்றினர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் கள் எவரும் இதுவரை கைது செய்யப்படாத நிலையில் பொலிஸார் மேலதிக விசா ரணைகளில் ஈடுபட்டு வரு கின்றனர்.



# பல மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

இலங்கையில் நிலவும் சீரற்ற காலநிலை காரண மாக பல மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள் ளது.

அந்தவகையில் பதுளை, காலி, களுத்துறை, கண்டி, குருநாகல் மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களுக்கு முதலாம் நிலை மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக் கப்பட்டுள்ளது.

கேகாலை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு இரண்டாம் நிலை மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### திருட்டுத்தனமாக...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமை யார் என்று நான் அண்மை யில் ஒரு கேள்வி எழுப்பியிருந்தேன். அதற்கு சுமந்திரன் பதில் அளித்துள்ளார். அவரது பதிலில் வன்னியில் உள்ள எமது வேட்பாளர்களுக்கும் எமில்காந்தனுக் கும் இடையிலான விடயம் அது. அந்த லெவலுக்குத்தான் இறங்கிப்போகத் தேவையில்லை என்றவாறாக ஒரு பதி லைச் சுமந்திரன் சொல்லியிருக்கின் றார்.

தமிழ் மக்களின் இரத்தத்தாலும் சதையாலும் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் திருட்டுத்தன மாகத் தேசியப் பட்டியல் ஊடாக அரசி யலுக்குள் நுழைந்த சுமந்திரனுக்கு வன்னியில் இருக்கும் பிரச்சினைகளுக் காக இறங்கி வரவேண்டிய தேவை இல்லை. அப்படிச் சொல்வது அவருக்குப் பெரிய விடயமாக இருக்காது.

மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத இவர்கள் தமது இரண் டாம் கட்ட உறுப்பினர்களை வேட் பாளர்களாக அனுப்பி அவர்கள் மூலமாக இன்னுமொரு திருட்டு வெற்றியை நுட்பமான முறையில் பெற முயற்சிக்கின் றார்கள். சுமந்திரனால் பதில் அளிக்க முடியாத அளவுக்கு வன்னி மாவட்டம் ஒன்றும் இரண்டாம் நிலையிலோ அல்லது இங்கு வாழ்வோர் இரண்டாம் தரப் பிரஜைகளோ அல்ல. வன்னியில் இருப்பவர்கள் சுமந்திரனை விடத் தரமான வேலைகளைச் செய்யக்கூடியவர்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவானபோது என்னுடைய பங்க ளிப்பும் அதில் இருந்தது. அதனூடாக மிகக் கடுமையான காலங்களையும் நாங்கள் கடந்து அதன் பலம் நிர்ணயிக் கப்பட்டது. அந்தப் பலத்தின் மீது ஏறி நின்று திருட்டுத்தனமாக உள்ளே வந்து இவ்வாறான பதில் சொல்வதை முதலில் நிறுத்திக் கொள்ளுங்கள்.

அதேபோல், வன்னியில் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் சிவசக்தி ஆனந்தன் ஆகியோரது ஆதரவாளர்கள் பிரசாரக் கூட்டங்களில் எமது சின்னமான கோடரிச் சின்னத்தைத் தொடர்ச்சியாக விமர்சிக்கின்றார்கள். அவற்றை இன்றி லிருந்து நிறுத்திக் கொள்ளுங்கள்.

காரணம் உங்களுடைய அத்தனை வரலாறுகளும் நான் அறிந்தவன். நீங்கள் ஆரம்பத்தில் நாடாளுமன்றம் சென்ற காலத்திலிருந்து அத்தனையும் நான் அறிந்தவன். எனவே, மக்களைப் பிழையாக வழி நடத்தி என் மீது சேறு பூசுவதை நிறுத்துங்கள். அல்லது அடுத்த ஊடகவியலாளர் மாநாட்டில் நேரடியாக உங்களைப் பற்றி பேச வேண்டிய தேவை ஏற்படும்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் சிவசக்தி ஆனந்தன் ஓர் அறிக்கையை வெளியிட்டிருந்தார். செல்வம் அடைக் கலநாதன் போட்டியிட்ட அணி அரசி டம் இலஞ்சமாகப் பணம் பெற்றுக் கொண்டு தேர்தலில் முகம்கொடுப்பதாக பகிரங்கமாக அவர் சொல்லியிருந்தார். அந்தக் குற்றச்சாட்டுக்கு என்ன நடந்தது? அவர்கள் பணம் வாங்கியதை சிவசக்தி ஆனந்தன் நிரூபித்தாரா அல்லது வாங்கவில்லை என்று அடைக்கல நாதன் நிரூபித்தாரா என்பதை மக்க ளுக்குத் தெரியுங்கள். ஏனெனில் இன்று இருவரும் ஒரே கட்சியில் போட்டியிடுகின்றீர்கள்.

எந்தக் கட்சியையும் விமர்சிப்பதில்லை என்பது எமது கொள்கையாக இருந்தது. ஆனால், நீங்கள் எங்களை சீண்டிக் கொண்டிருந்தால் நாமும் பதில் சொல்லியாக வேண்டும்.” – என்றார்.

### தேர்தல் திகதிக்கு...

செய்து உயர்நீதிமன்றம் இன்று திங் கட்கிழமை உத்தரவிட்டுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலை எதிர் வரும் 14ஆம் திகதி நடத்துவது அரச மைப்புக்கு முரணானது எனத் தீர்ப் பளிக்குமாறு கோரி எச்.எம். பிரியந்த ஹேரத்தினால் உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் இந்த மனு பிரிதி பத்மன் சூரசேன, ஷிரான் குணரத்ன மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகி யோர் அடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் இன்று விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது.

தேர்தல் சட்டத்தின் பிரகாரம் நாடாளு மன்றத் தேர்தலுக்கான திகதி சரியாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்றும், தேர்தலுக்கான நடவடிக்கைகள் தற்போது நிறைவடைந்துள்ளன என்றும் சட்டமா அதிபர் தரப்பில் ஆஜரான சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணியின் கருத்தை ஆராய்ந்த நீதிபதிகள் குழாம் மேற்படி உத்தரவைப் பிறப்பித்தது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ்...**

எனவே. புளொட் மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈ.பி.டி.பி. இயக்கங்கள் செய்த படுகொலைகளை விசாரித்து குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுக்கொடுக்க வேண்டியது தமிழ் மக்கள் கடமையாகும். அதற்கு இந்த ஆயுதக் குழுக்களுக்கு மக்கள் பிரதிநிதி என்ற உயரிய பசுத்தோல் போர்க்காமல் இருப்பது தமிழ் மக்களின் இன்றைய கடமையாகும்.”

– இவ்வாறு காட்டத்துடன் தெரிவித்தார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வேட்பாளரும் வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளருமான தியாகராஜா பிரகாஷ்.

உடுவிலில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் தொடர்ந்து பேசிய அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

“புளொட் இயக்கம் 2009ஆம் ஆண்டு மே 19 ஆம் திகதி முள்ளிவாய்க்காலில் யுத்தம் மௌனிக்கும் வரை இராணுவத்தினருடன் நேரடியாக இணைந்து தமிழ் மக்கள் மீதான படுகொலைகளை மேற்கொண்டிருந்தது என்பது காலி முகத்திடலில் நடைபெற்ற இலங்கை இராணுவத்தின் வெற்றி விழாவில் புளொட் தலைவர் சித்தார்த்தனே பெருமையாக அதை ஒப்புக்கொண்டார்.

யாழ். நகரில் புளொட் இயக்கம் செய்த கோரக்கொலைகளில் ஒன்று கரவெட்டியைச் சேர்ந்த 23 வயதுடைய இராசரத்தினம் இராஜேஸ்வரன் என்ற இளைஞரை 1999ஆம் ஆண்டு பெப்ர–வரி மாதம் 21ஆம் திகதி கடத்திசென்று அந்த இளைஞரை சித்திரவதை செய்து அவரின் தலையை வெட்டி யாழ். வை–த்தியசாலை வீதியில் போட்ட சம்பவம் முக்கியமானதாகும்.

யாழ். நகரில் உள்ள புடைவைக் கடை ஒன்றில் வேலை செய்து கொண்டிருந்த இராஜேஸ்வரன் என்ற இளைஞர் வேலை முடிந்து கரவெட்டிக்கு சென்று கொண்டிருந்த போது காணாமல் போனார்.

அந்த இளைஞரைக் கடத்திச் சென்ற புளொட் இயக்கத்தினர் நெல்லியடியில் உள்ள புளொட் முகாமில் வைத்து சித்திரவதை செய்தனர். இரண்டு நாள்கள் வைத்து சித்திரவதை செய்த பின் அந்த இளைஞரின் தலையை வெட்டி எடுத்து சென்று யாழ். வைத்தியசாலை வீதியில் போட்டனர். 23 ஆம் திகதி அதிகாலை உடல் இல்லாத தலை மீட்கப்பட்டது. சித்திரவதை செய்து படுகொலை செய்வதில் பிரசித்தி பெற்ற புளொட் இயக்கத்தினர் யாழ். நகர மக்களுக்கு அச்சத்தை உருவாக்கும் வகையிலேயே தலையை யாழ். நகரில் போட்டனர் என அக்காலப் பகுதியில் பலரும் பேசிக்கொண்டனர்.

பின்னர் அத்தலைக்கு உரிய உடல் புளொட் இயக்கத்தின் நெல்லியடி அலுவலக மலசல கூட குழியிலிருந்து மீட்கப்பட்டது. அது தொடர்பாக இருவர் கைது செய்யப்பட்ட போதிலும் புளொட் இயக்கம் அரச படைகளுடன் சேர்ந்து இயங்கிய காரணத்தால் அவர்கள் பின்னர் விடுதலை செய்யப்பட்டு விட்டனர்.

இந்தக் கொலையின் மூலம் யாழ். நகர மக்களை அச்சத்தில் வைத்திருக்கலாம், பயமுறுத்தி வைத்திருக்கலாம் என எண்ணிய புளொட் இயக்கத்திற்கு அது தோல்வியாகவே அமைந்தது. இந்தக் கொலை உட்பட யாழ். நகரில் அக்காலப்பகுதியில் புளொட் இயக்கம் செய்த கொலைகளால் யாழ். குடாநாட்டில் புளொட் இயக்கத்திற்கு மக்கள் மத்தியில் பலத்த எதிர்ப்பு எழுந்தது.

யாழ். குடாநாட்டில் புளொட் இயக்கத்தை மக்கள் வெறுத்து ஒதுக்கியதால் யாழ். குடாநாட்டை விட்டு வெளியேறி வவுனியாவில் நிலை கொள்ள வேண்டி ஏற்பட்டது.

அதேபோன்று வவுனியாவில் மாணிக்க தாசன், அலவாங்கு தாசன் தலைமையிலான புளொட் கொலைக்குழு கடத்தல் கப்பம் பெறுதல், பாலியல் பலாத்காரம், படுகொலை என அவர்கள் செய்த அட்டூழியங்களின் பட்டியல் மிக நீளமானவை.

அது போன்று மட்டக்களப்பில் புளொட் இயக்கம் செய்த படுகொலைகள், அட்டூழியங்கள் எண்ணில் அடங்கா.

2004ஆம் ஆண்டு ஓகஸ்ட் முதலாம் திகதி கொழும்பில் சுட்டுக்கொல்லப்பட்ட புளொட் மோகன் செய்த படுகொலைகளின் பட்டியலை வடக்கு, கிழக்கில் காணாமல்போனோர் பற்றி விசாரித்த நீதியரசர் பாலகிட்ணர் தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் விவரமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

கிழக்கு பல்கலைக்கழக அகதி முகாமில் 1990ஆம் ஆண்டு செப்டெம்பர் 5 ஆம் திகதி 158 பொதுமக்களைக் கடத்திச் சென்று படுகொலை செய்த சம்பவத்தில் புளொட் மோகன் முக்கியமானவர் என நீதியரசர் பாலகிட்ணர் தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

1990 ஆம் ஆண்டு ஜுன் மாதத்துக்குப் பின்னர் அப்பாவி பொதுமக்களை பிடித்து மட்டக்களப்பில் வீதிகளில் உயிருடன் ரயர் போட்டு எரித்த சம்பவங்களை தினசரி அந்தப் பிரதேச மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியது. இந்தக் கொலைகளை கப்டன் முனாசுடன் சேர்ந்து புளொட் மோகனும் ஏனைய புளொட் இயக்கத்தினருமே செய்தனர்.

இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத வவுணதீவு பகுதியில் மறைந்திருந்து பொதுமக்களை சுட்டுக்கொன்ற சம்பவங்களால் மக்கள் வெளியே செல்ல அச்சப்பட்டனர்.

1988ஆம் ஆண்டு புளொட் மோகன் தலைமையிலான புளொட் இயக்கத்தினர் கல்லடி பாலத்துக்கு அருகில் வைத்து வீரகேசரி மட்டக்களப்பு செய்தியாளர் ஆர்.நித்தியானந்தனை பிடித்து கழுத்தை அறுத்து விட்டுச் சென்றனர்.

நித்தியானந்தன் இறந்து விட்டார் என நினைத்தே புளொட் இயக்கத்தினர் சென்றனர். ஆனால் அவர் பொதுமக்களால் மீட்கப்பட்டு மட்டக்களப்பு வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்பட்ட பின்னர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் காப்பாற்றப்பட்டார்.

அதன் பின்னர் நித்தியானந்தன் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் சேர்ந்தார். 1992ஆம் ஆண்டு புளொட் மோகன் மறைந்திருந்து நித்தியானந்தனைச் சுட்டுக்கொன்றார்.

புளொட் இயக்கத்தின் அலுவலகம் மட்டக்களப்பு வைத்தியசாலை வீதியில் இருந்தது. படுவான்கரை கிராமங்களிலிருந்து மட்டக்களப்பு நகருக்கு வரும் மக்கள் புளொட் அலுவலகம் இருக்கும் வீதியால் செல்லவே அச்சம் அடைவார்கள். படுவான்கரையில் இருந்து விறகு கொண்டு வந்து விற்று விட்டு 300ரூபா பணத்துடன் சென்ற ஓர் ஏழைத்தொழிலாளியை கூட புளொட் இயக்கத்தினர் 300ரூபாவுக்காகக் கடத்தி கொலை செய்த சம்பவமும் உண்டு.

ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கத்தின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கனடா செல்வதற்கு அந்த நாடு தடை செய்திருக்கின்றது. இதற்குக் காரணம் சுரேஷ் பிரேமச்சந்திரனும் அவர் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கமும் படுகொலைகளில் ஈடுபட்டதாக கனடா அரசுக்கு ஆதாரம் கிடைத்ததால் சுரேஷ் பிரேமச்சந்திரனுக்கு கனடா அரசு இந்தத் தடையை விதித்துள்ளது.

இதில் முக்கியமான சம்பவம் முரசொலி பத்திரிகையின் பிரதம ஆசிரியராக இருந்த திருச்செல்வத்தின் மகன் அகிலன் என்ற மாணவனை சித்திரவதை செய்து கொன்றதாகும்.

அந்தக் காலப்பகுதியில் ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கத்தில் மண்டையன்குழு என்ற கொலைப்படை இயங்கி வந்தது.

யாழ்ப்பாணம், வவுனியா மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களில் மண்டையன் குழு இயங்கியது.

1989ஆம் ஆண்டு மே மாதம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இளைஞர் ஒருவரின் வயிற்றிலிருந்து கொக்கோகோலா போத்தல் ஒன்று சத்திர சிகிச்சை மூலம் எடுக்கப்பட்டது.

அந்தச் செய்தி முரசொலி பத்திரிகையில் மட்டுமே வெளியாகியது. அந்த இளைஞர் சில தினங்களுக்கு முதல் சிலரால் கடத்திச் செல்லப்பட்டிருந்தார் என இறுதியில் எழுதப்பட்டிருந்தது.

அந்த இளைஞரைக் கடத்தியவர்கள் ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கத்தினர் என பின்னர் பலருக்கும் தெரியவந்தது. இதனால் ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கத்தினர் முரசொலி ஆசிரியர் திருச்செல்வத்தை சுட்டுக்கொல்வதற்குத் திட்டமிட்டனர்.

முரசொலி பத்திரிகை ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கம் செய்து வந்த படுகொலைகளையும் மனித உரிமை மீறல்களையும் அம்பலப்படுத்தி வந்தது.

அன்று ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத்துக்கு யாழ்ப்பாணத்தில் தலைமை தாங்கிய சுரேஷ் பிரேமச்சந்திரன் இந்திய இராணுவத்துக்காகவும் தங்கள் மீது விடுதலைப்புலிகள் மேற்கொள்கின்ற தாக்குதலுக்காகவும் பழிக்குப் பழி வாங்குகின்ற படுகொலைகளை முன்னின்று நடத்தி வந்தார்.

புலி ஆதரவாளர்கள் புலிகளுக்கு உதவியவர்கள், புலிகளுக்கு அடைக்கலம் கொடுத்தவர்கள் எனப் பலர் ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கத்தால் படுகொலை செய்யப்பட்டனர். திருச்செல்வத்தையும் கடத்திக் கொலை செய்வதற்கு ஈ.பி.ஆர்.

தொடர்ச்சி▼

தொடர்ச்சி▲

எல்.எவ். இயக்கம் திட்டமிட்டது.

எஸ்.திருச்செல்வத்தைக் கடத்துவதற்காக அவருடைய வீட்டுக்கு மண்டையன் குழுவினர் சென்றபோது திருச்செல்வம் வீட்டின் பின் பக்கத்தால் தப்பியோடிவிட்டார். அதனால் அங்கிருந்த அவரது மகன் அகிலனை மண்டையன் குழுவினர் கடத்திச் சென்றனர். திருச்செல்வம் தங்களிடம் வந்தால் மகனை விடுவிப்போம் என்று எச்சரித்துச் சென்றனர். தான் அவர்களிடம் சென்றால் கொல்லப்படுவேன் என்பதை நன்கு அறிந்திருந்த திருச்செல்வம் தான் செல்லாவிட்டால் தன் மகனைக் கொல்வார்கள் என்பதை எதிர்பார்த்திருக்கவில்லை.

இந்நிலையில் மண்டையன் குழு அகிலனை படுமோசமான சித்திரவதைக்கு உள்ளாக்கியது. அகிலனின் மலவாசலினூடாக சோடாப் போத்தலை செலுத்தினார்கள். அவருடைய நகங்களைப் பிடுங்கினார்கள். மறுநாள் அகிலன் பிணமாக வீதியில் வீசப்பட்டார்.

எஸ்.திருச்செல்வம் தம்பதிகளுக்கு கனேடிய அரசு அரசியல் தஞ்சம் வழங்கி அவர்களை கனடாவுக்கு அழைத்தது. திருச்செல்வம் தனது மகனின் கொலை தொடர்பாக கனடிய அரசுக்கு வழங்கிய சாட்சியத்தில் சுரேஷ் பிரேமச்சந்திரனைக் குற்றம்சாட்டி இருந்தார். அதனால் சுரேஷ் பிரேமச்சந்திரனின் பெயர் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டு அவருக்கு விசா வழங்க கனடிய அரசு மறுத்து வருகின்றது.

இந்த இயக்கங்கள் மக்களுக்கு எதிராக துப்பாக்கிகளைத் திருப்பிய சம்பவங்கள் எண்ணிலடங்கா. அரச படைகளுக்கு எவ்விதத்திலும் குறையாமல் சித்திரவதைகளிலும் படுகொலைகளிலும் இந்த இயக்கங்கள் ஈடுபட்டன. ஒருவரைக் கொல்வதற்கு எவ்வித காரணங்களும் கொடுக்கப்பட வேண்டிய தேவையே இருக்கவில்லை.

கல்லூரியின் மிகத் திறமையான மாணவனான அகிலன் படுகொலை செய்யப்படுவதற்கு சில வாரங்கள் முன்னதாக ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகள் வெளியாகி இருந்தன. அதில் அகிலன் நான்கு பாடங்களிலும் 'ஏ' பெற்று மிகத் திறமையாக சித்தியடைந்திருந்தார். தான் கல்வி கற்ற கல்லூரியின் கிரிக்கெட் குழுவின் தலைவனாகவும் அகிலன் விளங்கினார்.

மாணவன் அகிலன் திருச்செல்வனின் கொலை ஒருபோதுமே நியாயப்படுத்தப்பட முடியாத படுகொலை. தகப்பனுக்காக ஒருபோதுமே மகனைக் கடத்திப் படுகொலை செய்தது யாராகவிருந்தாலும் ஏற்றுக்கொள்ளமுடியாத படுகொலை.

அதேபோன்று மட்டக்களப்பில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க தலைவராகவும் பிரஜைகள் குழு துணைத்தலைவராகவும் இருந்த வணசிங்க மற்றும் மட்டக்களப்பு பிரஜைகள் குழுத்தலைவர் வணபிதா சந்திரா பெர்னாண்டோ ஆகியோரின் கொலைகளையும் ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கமே செய்தது.

வந்தாறுமூலையில் பிறந்த வணசிங்க 1961ஆம் ஆண்டு சத்தியாக்கிரகப் போராட்டம் தொடக்கம் தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டத்தில் தன்னை இணைத்து கொண்டவர்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க தலைவராக இருந்த வணசிங்க, இந்திய இராணுவ காலத்தில் தமிழ் மக்களின் பாகாப்பு தொடர்பான நடவடிக்கைகளில் முன்னின்று செயற்பட்ட முக்கிய பிரமுகர்களில் ஒருவராக விளங்கினார்.

மட்டக்களப்பு மாவட்ட பிரஜைகள் சபையின் உறுப்பினராகவும், பின்னர் அதன் துணைத்தலைவராகவும் இருந்து பாதிக்கப்பட்ட மக்களின் குரலாக ஒலித்தவர்.

அநீதியும் உரிமை மீறலும் எங்கு நடக்கின்றதோ அங்கு சென்று அவற்றைத் தட்டிக்கேட்டு நியாயம் தேடும் ஒரு தலைவனாக அவர் விளங்கினார். ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கம் செய்த அட்டூழியங்கள், படுகொலைகளைத் தட்டிக் கேட்டார்.

இதனால் ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கம் இவரைப் படுகொலை செய்ய திட்டமிட்டது. 1989ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் திகதி மட்டக்களப்பு அரசடியில் அவர் வீட்டில் இருந்த போது ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கத்தை சேர்ந்த இருவர் அங்கு சென்றனர். அவருடன் பேச வேண்டும் என்றனர். வீட்டு முற்றத்தில் போடப்பட்டிருந்த கதிரையில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தனர். திடீரென ஒருவர் வணசிங்காவை சுட்டுக்கொன்று விட்டு தப்பி சென்றனர்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கம் மட்டக்களப்பில் புரிந்த படுகொலைகளில் வணபிதா சந்திரா பெர்னாண்டோ அடிகளாரை மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்திற்குள் வைத்து சுட்டுக்கொன்ற சம்பவம் முக்கியமானதாகும்.

1988ஆம் ஆண்டு ஜூன் 6 ஆம் திகதி மட்டக்களப்பு புளியந்தீவில் உள்ள புனித மரியாள் தேவாலயத்திற்குள் வைத்து மட்டக்களப்பு மறைக்கோட்ட முதல்வரும் மட்டக்களப்பு பிரஜைகள் குழு தலைவருமான வண.பிதா சந்திரா பெர்னாண்டோ சுட்டுக்கொல்லப்பட்டார். இதே தேவாலயத்துக்குள் வைத்து தான் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பராசசிங்கமும் சுட்டுக்கொல்லப்பட்டார்.

வண.பிதா சந்திரா, மட்டக்களப்பு பிரஜைகள் குழு தலைவராக இருந்து ஆற்றிய பணிகள் பல. ஈ.பி.ஆர்.எல்.எவ். போன்ற இயக்கங்கள் செய்யும் அட்டூழியங்களை அம்பலப்படுத்தி வந்தார்.

அவர் சுட்டுக்கொல்லப்படுவதற்கு சில வாரங்களுக்கு முதல் மட்டக்களப்பு நகரில் வைத்து சுகுணா என்ற தமிழ் இளம் பெண்ணையும் ரிபாயா என்ற முஸ்லிம் இளம் பெண்ணையும் ஈ.பி.ஆர்.எல். எவ் இயக்கத்தினர் கடத்திச் சென்றனர். இவர்களை வாவிக்கரை வீதியில் உள்ள அவர்களின் அலுவலகத்தில் வைத்து கூட்டாக பலரும் பாலியல் பலாத்காரம் செய்தனர். வண.பிதா சந்திரா இவர்களை மீட்பதற்கு பல முயற்சிகளை மேற்கொண்டார். இந்திய இராணுவ கட்டளை தளபதி ஒருவருடன் தொடர்பு கொண்டதன் பின் சுகுணா என்ற தமிழ் பெண் மீட்கப்பட்டார். ஆனால், ரிபாயா என்ற முஸ்லீம் பெண்ணை அவர்கள் பாலியல் பலாத்காரம் செய்து படுகொலை செய்துவிட்டனர்.

இந்த விடயத்தை வணபிதா சந்திரா மனித உரிமைகள் அமைப்புக்கள் மட்டத்திற்கு கொண்டு சென்றார். இதற்கு பழிவாங்குவதற்காகவே ஈ.பி.ஆர்.எல். எவ் இயக்கம் வணபிதா சந்திராவைப் படுகொலை செய்தது.

அதேபோன்றுதான் 1989 ஆம் ஆண்டு பருத்தித்துறை பிரஜைகள் குழு தலைவராக இருந்த சிவானந்தசுந்தரத்தை ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கம் சுட்டுக் கொன்றது. யாழ்ப்பாணம் - அரியாலையில் கூட்டம் ஒன்றில் உரையாற்றி விட்டு பருத்தித்துறை நோக்கிச் சென்ற போது அவரை ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கத்தினர் சுட்டுக்கொன்றனர்.

அக்காலப்பகுதியில் ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கத்தின் மனித உரிமை மீறல்களை அம்பலப்படுத்திய பிரஜைகள் குழுக்களின் தலைவர்கள் யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

மக்களின் குரலாக ஒலித்த மக்கள் தலைவர்களைப் படுகொலை செய்த சம்பவங்கள் இலகுவில் மறந்து விடக்கூடியவை அல்ல. அந்த கொலைகளைப் புரிந்தவர்கள் அதற்கு உத்தரவிட்டவர்கள், உடந்தையாக இருந்தவர்கள் அனைவரும் நீதியின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும்.

ஈ.பி.டி.பி. சந்திரிகா அரசு காலத்திலும் அதன்பின் மஹிந்த அரசுக் காலத்திலும் செய்த கொலைகள் ஏராளம். நாரந்தனையில் பிரசாரத்துக்காக சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது கொலைவெறித் தாக்குதல். ஊடக நிறுவனங்கள் மீது தாக்குதல். ஊடகவியலாளர்களான நிமலராஜன், ரஜிவர்மன் படுகொலை என்று நீண்டுகொண்டே செல்கின்றது. இவை அனைத்தும் முறையாக விசாரித்து குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்.

தற்போது அநுர அரசால் சிவராம் என்று போற்றப்பட்ட 'தராகி' சிவராம் படுகொலை விசாரனை துரிதப்படுத்தப்பட்டுள்ளது. அதனை நாம் வரவேற்கின்றோம். சர்வதேச விசாரனையை நாம் கோருவதற்கு முன், எம்முள்ளே பசுத்தோல் போர்த்தவர்களை முதலில் களையவேண்டும். இந்தத் தேர்தலில் மக்கள் அவர்களை நிராகரிக்கவேண்டும். அப்போதுதான் சரியான நீதி கிடைக்க நாம் பாடுபடுவோம். எமது குரல்கள் நாடாளுமன்றில் ஒலிக்க நீங்கள் ஏகோபித்த ஆணையை வழங்க வேண்டும்.

இந்தக் கொலைகாரர்களை நீங்கள் நிராகரிக்க வேண்டும். அப்போதுதான் நாம் அவர்களுக்கு முறையான தண்டனையை பெற்றுக்கொடுக்கமுடியும்.

மாறாக நீங்கள் அவர்களை மக்கள் பிரதிநிதியாகத் தெரிவு செய்வீர்களானால் அவர்கள் தம்மைக் காப்பதற்காக நாடாளுமன்றில் பெரும்பான்மைக்காக தளம்பும் அநுர அரசுடன் தம்மைக் காப்பதற்காக இலகுவில் விலைபோய்விடுவார்கள். பிறகு இவர்கள் செய்த கொலைக்கான நீதி கிடைக்காமலே செல்லலாம்." - என்றார்.




# மன்னாருக்குப் பிரதமர் ஹரிணி விஜயம்

(எஸ்.ஆர்.லெம்பேட்)

பிரதமர் ஹரிணி அமரசூரிய இன்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் மன்னாருக்கு விஜயம் மேற்கொண்டார்.

நாடாளுமன்றத் தேர்தலில் வன்னி மாவட்டத்தில் போட்டியிடும் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்களை ஆதரித்து மன்னார் நகர சபை மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அவர் கலந்து கொண்டார்.

தேசிய மக்கள் சக்தியின் (ஜே.வி.பி) யாழ். மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகரன் மற்றும் வன்னி மாவட்ட வேட்பாளர்கள் உள்ளடங்களாக சுமார் 500 இற்கும் மேற்பட்ட பொது மக்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

பிரதமரின் வருகையையொட்டி மன்னார் நகரப் பகுதியில் பலத்த பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

மேலும். மன்னார் நகர சபை மண்டபத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கலந்து கொள்ளச் சென்ற மக்கள் கடுமையான உடல் சோதனைக்கு உட் படுத்தப்பட்டனர்.














## நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


# அதிகப்பிரசங்கித்தனம்

கற்பனையில் பேசுவதும், சாத்தியப்பாடு இல்லாத விடயங்களை நடத்திக் காட்டுவதாக முழங்குவதும், இயலாத காரியங்களை செய்து முடிப்பதாக உறுதி அளிப்பதும் அரசியல்வாதிகளின் வழமையான பண்புகள்தான்.

புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க நுவரெலியாவில் நேற்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அத்தகைய முழக்கம் ஒன்றை வெளியிட்டிருக்கின்றார்.

தமது அரசாங்கத்தை ஒருபோதும் கவிழ்க்க முடியாது என அவர் சூளுரைத்திருக்கிறார்.

பொதுத்தேர்தலில் உருவாகப் போகும் அரசு தமது கட்சியினுடையதா, பொதுத் தேர்தல் பெறுபேறு எப்படி அமையப் போகின்றது, இந்தத் தேர்தலின் பின்னர் அறுதிப் பெரும்பான்மை கொண்ட வலிமையான அரசு ஒன்றைத் தம்மால் அமைக்க முடியுமா என்பவை பற்றி எல்லாம் தெரியும் முன்னரே ஆண்டிப் பண்டாரம் கனவு கண்டு அரற்றிய மாதிரி அவர் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

தமது அரசாங்கத்தை ஒருபோதும் கவிழ்க்க முடியாது என அவர் நுவரெலியாவில் போய் முழங்கி இருக்கிறார்.

இலங்கையினுடைய அண்மைக்கால அரசியல் சரித்திரத்தை அருகில் இருந்து அதனுடன் இரண்டறக் கலந்து, பங்கு பற்றி, அனுபவபூர்வமாக அறிந்து கொண்டுள்ள அநுரகுமார திஸநாயக்க இவ்வாறு கூறுவது வியப்புக்குரியது.

69 லட்சம் வாக்குகளை அள்ளிக் கொட்டி, முன்பின் இல்லாத வெற்றியை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு இலங்கை மக்கள் வழங்கினார்கள். இலங்கையின் தேர்தல் சரித்திரத்தில் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமையின் கீழ் ஒரு தரப்பு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வெற்றியை நாடாளுமன்றத்தில் நேரடியாகப் பெற்றுக் கொள்வது சாத்தியமேயற்றது என்ற பொதுவான கருத்தை உடைத்து, அடுத்த வருடத்தில் அளப்பரிய பெரு வெற்றியை பொதுத் தேர்தலிலும் அதே கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமைக்கு இலங்கை மக்கள் வழங்கினார்கள்.

ஆனால், அதே மக்கள் அடுத்த இரண்டு வருடங்களுக்குள் அந்த ஜனாதிபதியை நாட்டை விட்டே ஓட ஓட விரட்டியடித்தார்கள் .

தாங்கள் வாக்களித்தமைக்காக அந்த அரசின் பதவிக்காலம் முழுவதும் கூட அவரைத் தொடர்வதற்கு மக்கள் அனுமதிக்கவில்லை.

ஆகவே இந்தப் பின்புலத்தில் தமது அரசாங்கத்தை ஒருபோதும் கவிழ்க்க முடியாது என்று இலங்கை அரசியல் தலைவர்கள் முழங்குவது வெறும் அபத்தம்.

அப்படி கவிழ்ப்பதற்கு இடமளிக்காமல், தாம் மக்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப அவர்களைத் திருப்திப்படுத்தும் விதத்தில் ஆட்சி புரிவார், அதிகாரத்தை பிரயோகிப்பார், அரசை கொண்டு நடத்துவார் என்று வேண்டுமானால் ஜனாதிபதி உறுதியளிக்க முடியும்.

அதை மனதில் கொண்டுதான் தமது அரசாங்கத்தை ஒருபோதும் கவிழ்க்க முடியாது என அவர் நுவரெலியாவில் வைத்து சூளுரைத்தருப்பார் என்று கருத முடியும்.

ஆனாலும் பொருளாதார சீர்கேட்டில் தடுமாறிக் குழம்பிப் போயிருக்கும் நாட்டைப் பின்னடைவின்றி முன்னோக்கி கொண்டு செல்வதாயின், அதற்கு முதலில் நாட்டில் நல்லிணக்கத்தையும் தேசிய இனப் பிரச்சினைக்கு நின்று, நிலைத்து, நீடிக்கக் கூடிய - நீதி, நியாயமான - நிரந்தர - தீர்வு ஒன்றைக் காணும் நடவடிக்கைகளை அவர் முன்னெடுக்க வேண்டும்.

பொருளாதாரப் பின்னடைவு நிலையில் இருந்து நாடு மீண்டெழுந்து சுமுக நிலை ஏற்படுவதற்கு பொருளாதாரச் சீர்திருத்தங்கள் மட்டுமல்லாமல், தேசிய நல்லிணக்கமும் அமைதியும் சமாதானமும் நிலவுவது மிக முக்கியமாகும்.

தங்களுடைய குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக பேரினவாதத்தை தென்னிலங்கை மக்கள் மத்தியில் விதைத்துள்ள அரசியல்வாதிகள், அந்தக் கொடுஞ் சிந்தனைக்கு மத்தியில் தேசிய இனப் பிரச்சினைக்கு நீதி, நியாயமான தீர்வு ஒன்றை எட்டுவது சுலபமானது அல்ல.

அதுவும் முன்னர் எதிரணிகளில் இருந்த சமயங்களில், தங்களுடைய அரசியல் இலாபங்களுக்காக அதே பௌத்த - சிங்கள பேரினவாத வெறித்தன நடவடிக்கைகளை தூண்டிவிட்ட ஜே.வி.பி. போன்ற கட்சிகளின் தலைவர்கள் இப்போது என்ன பரிசுத்த வேடத்தைப் போட்டு வந்தாலும், அந்த பின்புல போக்கிலிருந்து தம்மை மாற்றி, நீதி, நியாயமான தீர்வு ஒன்றை நாட்டுக்கு தருவார்கள் என்று நம்புவது முயல் கொம்பாகத்தான் இருக்கும்.

நாட்டின் சகல மக்களுக்கும் நீதி, நியாயமான தீர்வை தர முடியாத ஓர் அரசுத் தலைவர் தமது ஆட்சி நின்று, நிலைத்து, நீடிக்கும் என்று சூளுரைப்பது மழைக்கால வானவில்லை பார்த்து மகிழ்வதற்கு ஒப்பானதுதான்.

# நிலவு தேய்ந்து அமாவாசையாவதுபோல் தற்போது தமிழரசுக் கட்சியின் நிலைமை!

## ஜனநாயக தமிழரசுக் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளர் தவராசா

(த.சுபேசன்)

தந்தை செல்வாவால் உருவாக்கப்பட்ட தமிழரசுக் கட்சி, நிலவு தேய்ந்து அமாவாசையாக மாறுவது போன்று மாறி வருகிறது என்று ஜனாதிபதி சட்டத்தரணியும் ஜனநாயக தமிழரசுக் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளருமான கே.வி. தவராசா சுட்டிக்காட்டியுள்ளார்.




நேற்று (03) ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி நகரில் இடம்பெற்ற ஜனநாயக தமிழரசுக் கூட்டமைப்பின் காரியாலய திறப்பு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

நாடாளுமன்ற உறுப்பினராக வேண்டும் என்ற எண்ணமோ அமைச்சுப் பதவி எடுக்க வேண்டும் என்ற விருப்பமோ எனக்குக் கிடையாது.

அவ்வாறான விருப்பம் இருந்திருந்தால் எப்போதோ தெற்கு அரசியலில் இணைந்து எனது வாழ்வை கொண்டு சென்றிருப்பேன்.

நான் இதுவரை பயங்கரவாத மற்றும் அவசர கால தடைச் சட்டத்தின் கீழ் கைதான 1545 பேருடைய வழக்கில் ஆஜராகி உள்ளேன்.

ஒவ்வொரு வழக்கும் 10-15 வருடங்கள் நீடித்துள்ளன. நான் ஆஜராகிய அனைத்து வழக்குகளையும் முடித்துக் கொடுத்துள்ளேன். அந்த வகையில் அவ்வாறு கைதாகியுள்ளவர்களுடைய - அவர்களுடைய உறவுகளுடைய வேதனை எனக்குத் தெரியும்.

நான் யுத்தம் மௌனிக்கப்பட்ட பின்னர் 2009 ஆம் ஆண்டு தமிழரசுக் கட்சிக்குள் உள்வாங்கப்பட்டேன்.

இந்த 15 ஆண்டுகளாக தமிழரசில் பல பதவிகளை வகித்துள்ளேன். நான் தமிழரசுக் கட்சியில் ஒரு பதவியைக் கூட கேட்டுப் பெறவில்லை.

2009 ஆம் ஆண்டு யுத்தம் மௌனித்த பின்னர் தமிழரசுக் கட்சிக்குள் ஒரு பிசாசு புகுந்து விட்டது.

கடந்த 1949 ஆம் ஆண்டு தமிழரசுக்கட்சி உருவாக்கப்பட்டது. அது 2009 ஆம் ஆண்டுவரை தமிழரசாகவே இருந்தது.

ஆனால் இன்று அது நிலவு தேய்ந்து அமாவாசையாக மாறுவது போன்று அழிவடைந்து வருகிறது.

இதனால்தான் தமிழ்த் தேசியத்தை பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கில் ஜனநாயக தமிழரசுக் கூட்டமைப்பை உருவாக்கியுள்ளோம். - என்றார்.





## இலங்கை தமிழரசு கட்சியின்

# மன்னார் பெண் வேட்பாளரின் தேர்தல் அலுவலகம் திறப்பு!

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

இலங்கை தமிழரசு கட்சியின் வன்னி தேர்தல் தொகுதி மன்னார் மாவட்ட வேட்பாளர் சட்டமாணி அ.கலிஸ்ரா டலிமாவின் தேர்தல் பிரச்சாரத்துக்கான அலுவலகம் கடந்த சனிக்கிழமை (02) தலைமன்னார் ஊர்மனை கிராமத்தில் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

இதில் மன்னார் மாவட்ட தமிழரசுக் கட்சியின் செயலாளர் உட்பட தமிழரசு கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் ஊர் மக்கள் கலந்து கொண்டனர்.

மன்னர் மாவட்டத்தில் தமிழரசு கட்சியின் முதல் பெண் வேட்பாளராக இவர் முதன் முறையாக நாடாளுமன்றத் தேர்தலில் களம் இறங்கியுள்ளார்.

சட்டமாணியான இவர் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தின் ஊடாக பெண்களுக்கான உரிமைகள் மற்றும் தொழில் வாய்ப்பு மற்றும் எதிர்காலத்தில் பெண்களை முதன்மைப்படுத்தும் நடவடிக்கை உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்திகளையும் நாடாளுமன்ற சட்டம் தொடர்பான நடவடிக்கையையும் உரிமைகளை சட்ட ரீதியாக முன்னிறுத்தி வென்றெடுப்பது தொடர்பிலும் இன்னும் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபடுதல் தொடர்பாகவும் தமது தேர்தல் கொள்கை முன்வைப்பில் தெளிவுபடுத்தியுள்ளார்.

# பாதுகாப்பற்ற ரயில் கடவைகளை அரசு பாதுகாப்பாக மாற்ற வேண்டும்

## வேட்பாளர் நடனதேவன் தெரிவிப்பு

(த.சுபேசன்)

நாட்டில் உள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவைகள் அனைத்தையும் அரசு விரைவில் பாதுகாப்பான ரயில் கடவைகளாக மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற தேர்தல் வேட்பாளர் ம.நடனதேவன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,



வடக்குக்கான அதிவேக ரயில் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் பெரும்பாலான ரயில் கடவைகள் பாதுகாப்பானவையாக இல்லை.

தென்மராட்சிப் பிரதேசத்தைப் பொறுத்தவரை பல ரயில் பாதுகாப்பற்ற கடவைகள் உள்ளன.

பெரும்பாலான கடவைகளில் காவலாளிகள் இல்லை. அதிலும் பாடசாலைக்கு அருகாமையில் உள்ள கடவைகள் கூட பாதுகாப்பற்ற கடவைகளாகக் காணப்படுகின்றன. அரசு மிகவிரைவாக நாட்டிலுள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவைகள் அனைத்தையும் பாதுகாப்பான கடவைகளாக மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.- என்றார்.

# நிலையான பொருளாதார அபிவிருத்தியை மட்டுமே தற்போது மக்கள் சிந்திக்க வேண்டும்

## கோடாரி சின்னத்தில் போட்டியிடும் முதன்மை வேட்பாளர் எமில் காந்தன்

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

இடம்பெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலானது வன்னி மாவட்ட மக்களின் மாற்றத்தை நோக்கிய தொன்றாகக் காணப்படுகிறது. நிலையான பொருளாதார அபிவிருத்தியை மட்டுமே தற்போது மக்கள் சிந்திக்க வேண்டும்.

வன்னி தேர்தல் களத்தில் புதிய மாற்றத்தை வேண்டிக் கோடாரி சின்னத்தில் போட்டியிடும் முதன்மை வேட்பாளர் எமில் காந்தன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாற்றத்தை நோக்கி மக்கள் பயணித்துக் கொண்டிருக்கின்றனர். இந்தச் சந்தர்ப்பத்தில் பல்வேறு தரப்பினர் தமது தேர்தல் பிரச்சாரத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

நாங்களும் எமது கோடாரி சின்னத்துக்கான பிரச்சாரத்தை முன்னெடுத்து வருகிறோம். நாங்கள் எமது பிரச்சாரத்தின் போது கட்சிகளையோ, அல்லது அந்தக் கட்சிகளின் வேட்பாளர்களையோ



விமர்சிப்பது இல்லை.ஆனால் இன்று சில கட்சிகள் தமது மக்கள் சந்திப்புக்களின் போது யாருக்கும் வாக்களித்தாலும் பரவாயில்லை கோடாரி சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டாம் என்று கூறுகிறார்கள்.

என்னையும், எனது சக வேட்பாளர்களையும் தனிப்பட்ட முறையில் விமர்சித்து வருகின்றனர். நாங்கள் அரசியல் செய்வது மக்களுக்காக.மக்களின் நலனுக்காக. அரசியல் என்பது ஒரு சேவை. அந்த சேவையை செய்ய மக்களை சிந்திப்பதற்கான ஒரு சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும். மக்களை குழப்ப கூடாது.

மக்கள் தமது நிலையான பொருளாதார அபிவிருத்தியை மட்டுமே சிந்திக்க வேண்டும். மக்கள் அதனையே கருத்தில் எடுத்துள்ளனர்.நிலையான அபிவிருத்தியை பற்றி மக்கள் சிந்தித்துக் கொண்டு இருக்கும் நிலையில், வெறும் வாக்கு அரசியலுக்கு மாத்திரம் மக்களை நாடினால் அது மக்கள் பணி அல்ல.- என்றார்.

EVEREST
FURNITURE
MODERN FURNITURE
FOR YOUR HOME


everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ MIX 1C1 SCARBOROUGH, CANADA

# அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்பட்ட உடனேயே தேர்தல் களத்தில் குதித்தோம்!

## ஈரோஸ் ஜனநாயக முன்னணித் தலைவர் தெரிவிப்பு

(பழுவூரான்)

எங்களுடைய கட்சியானது கடந்த வருடம் தேர்தல் திணைக்களத்தினால் ஓர் அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்பட்டது. இந்த நிலையில் நாம் மக்களின் ஆதரவு கோரி நிற்கிறோம் என்று ஈரோஸ் ஜனநாயக முன்னணித் தலைவர் சிறி ராஜ ராஜேந்திரா தெரிவித்தார்.

தமது கட்சி நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் போட்டியிடவுள்ள நிலையில் இது தொடர்பாக ஊடகத்துக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இவ்வூடகச் சந்திப்பு மட்டக்களப்பிலுள்ள கட்சியின் பிரதான அலுவலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (03) இடம்பெற்றது.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் தெரிவித்தவை வருமாறு,

நாங்கள் மிகக் குறுகிய காலத்தில் ஓர் அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்பட்டவுடனேயே தேர்தலில் குதிக்கிறோம். இத்தேர்தலைப் பொறுத்தவரையில் ஈரோஸ் ஜனநாயக முன்னணி எதனைச் சாதிக்கப் போகின்றது என்பதற்கும் அப்பால் எங்களுடைய அமைப்பின் தோற்றம் மற்றும் கடந்த காலச் செயற்பாடுகள் தொடர்பில் மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டிய தேவை எமக்குண்டு.

இந்த நிலையில் லண்டனில் 1975 ஆம் ஆண்டு ஈரோஸ் அமைப்பு உருவாக்கப்பட்டது. அதன் பின்பு இலங்கை அரசு தமிழ் மக்கள் மீது எந்த மொழியில் அடக்கு முறைகளைக் கட்டவிழ்த்து விட்டார்களோ அந்த மொழியில் நாங்களும் பேச வேண்டிய ஒரு நிர்ப்பந்தத்துக்கு ஆளானோம். இதன்போது ஆயுதம் தரித்த ஒரு இயக்கமாக எமது செயற்பாடுகளை 1987 ஆம் ஆண்டுவரை முன்னெடுத்திருந்தோம்.

1987 ஆம் ஆண்டு இலங்கை - இந்திய அரசுகள் இணைந்து செய்து கொண்ட ஒப்பந்தத்தின் பின் அவ்வொப்பந்தம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான முழுமையான தீர்வாக அமையாமல், இலங்கை - இந்திய அரசுகளின் நலன் சார்ந்த ஒப்பந்தமாக இருந்த போதிலும் தமிழ் பேசும் மக்களுக்கான குறைந்தபட்சத் தீர்வாக வட- கிழக்கு மாகாண சபை போன்ற விடயங்களை முன்வைத்திருந்தது.

இந்த நிலையில் நாம் எமது இயக்க நடைமுறைகளை விட்டு ஜனநாயக வழிமுறைக்குத் திரும்ப வேண்டிய சூழ்நிலை உருவானது.

1987 இல் நாங்கள் ஜனநாயக வழிமுறைக்கு வந்த பின்பு 1989 ஆம் ஆண்டு ஜனநாயக நீரோட்டத்தில் ஒரு சுயேட்சைக் குழுவாக ஈரோஸ் ஜனநாயக முன்னணியாகிய நாம் 13 நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பெற்றுக் கொண்டோம்.

பின்னர் அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற ஆயுதப் போராட்டத்தின் வெளிப்பாடாக மக்கள் மீது அடக்கு முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டது. இதன்போது ஜனநாயக வழிமுறையில் தெரிவு செய்யப்பட்ட எங்களது நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கிருந்து எதனையும் சாதிக்கப் போவதில்லை என்ற அடிப்படையில் நாம் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளைத் துறந்தோம்.

அதன் பின்னர் போராட்டத்தில் முழுமையாக விடுதலைப் புலிகள் ஈடுபட்டிருந்தனர். இந்த நிலையில் நாம் மௌனிக்கப்பட்டோம். அந்த மௌனத்தின் பின்னர் ஈரோஸ் வழிவந்த சிலரது அரசியற் பயணங்கள் மக்களது நன்மதிப்பைப் பாதிக்கும் வகையில் அமைந்திருந்தது.

இதன்போது ஈரோஸ் என்ற பெயரில் பிழையான பயணத்தை மேற்கொள்பவர்களை நாம் சரியான வழியில் கொண்டுவர எடுத்த முயற்சிகள் பயனற்றுப் போயின. இந்த நிலையில் மக்கள் மத்தியில் எங்களைப் பற்றிய பிழையான செய்திகள் பரிமாறப்பட்டன. இதன்போது ஈரோஸின் கொள்கை மற்றும் கோட்பாட்டில் வழி வந்த நாங்கள் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.



இவ்வாறான காலகட்டத்தில் தான் நாங்கள் ஈரோஸ் ஜனநாயக முன்னணியென்ற கட்சியை உருவாக்கினோம். அதனைக் கடந்த வருடத்தில் பதிவு செய்திருந்தோம்.

நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் நாம் ஆசனங்களைக் கைப்பற்றுவதற்கும் அப்பால், எம்மீது நம்பிக்கை வைத்துள்ள மக்களின் நன்மதிப்பைக் கணிப்பீடு செய்வதற்குமாகவே களமிறங்கியுள்ளோம்.

நான் முதலில் கூறியது போல் ஆசனங்களைக் கைப்பற்றுவதற்கும் அப்பால் மக்களுடனான தொடர்புகள் மற்றும் கடந்தகால அரசியற் செயற்பாடுகளில் தேசியத்தை உயர்த்திப் பிடித்து அதைத் தங்களுடைய முழுமையான ஆயுதமாகச் சொல்லிக் கொண்டு அதனை எவ்வளவு தூரம் மனச் சுத்தியோடும், அர்ப்பணிப்போடும் செய்து முடித்திருக்கிறார்கள் என்பதைக் கடந்தகால அரசியல் தலைவர்களின் செயற்பாடுகளைக் கணிப்பிட்டு, மக்களிடம் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாங்கள் ஒரு கட்சியாகப் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் களமிறங்குகின்றோம்.

இந்த நிலையில் நாங்கள் வெறுமனே நாடாளுமன்றத்துக்குச் சென்று, நாடாளுமன்றக் கதிரைகளைச் சூடேற்றுகின்ற பிரதிநிதிகளாக இல்லாமல், மக்களோடு மக்களாக நின்று அவர்களது அடிமட்டப் பிரச்சினைகள், அபிலாஷைகளை நிறைவு செய்கின்ற வகையில் செயற்படுவோம்.

நாங்கள் ஈரோஸினுடைய மூத்த தோழர்களாக இருந்தாலும், நாங்களே கட்சியைக் கட்டிப் பிடித்துக் கொண்டிருக்காமல் இன்றைய இளைய சமுதாயத்தை எமது கட்சிக்கு ஊடாக இணைத்துள்ளோம். அவர்கள் மூலம் உழைக்கும் மக்களின் உயர்வுக்காகப் பல்வேறு செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தவுள்ளோம்.

இவ்வாறான கால கட்டத்தில் ஓர் இயக்கமாக இருந்து கொண்டு அரசியல் நீரோட்டத்துக்கு வந்த நாங்கள் அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்பட்டு அரசியல் செயற்பாடுகளை ஆற்றிக் கொண்டிருக்கும் அதேவேளை சமகால அரசியல் மாற்றங்களையும் கருத்தில் கொள்ள வேண்டிய தேவையுள்ளது.


இரண்டு முறை போராட்டங்களை முன்னெடுத்து, முறியடிக்கப்பட்ட நிலையில் பல்வேறு தோழர்களைப் பலிகொடுத்து அதிலிருந்து மீண்டு வந்துதான் இன்று தேசிய மக்கள் சக்தி தனது அரசை நிறுவியிருக்கிறது.

ஆகவே போராட்டத்தினுடைய வலி மூலம் அவர்கள் மக்கள் தலைவர்களாக முன்வந்திருக்கும் நிலையை அவர்கள் அறிந்திருக்கிறார்கள். அதேமுறை மூலம் தான் நாங்களும் ஜனநாயக வழிமுறைக்கு வந்து இன்று அரசியல் கட்சியாக மக்கள் முன்வந்திருக்கிறோம்.

ஒட்டுமொத்தமாக நோக்கினால் இனிவரும் காலங்களில் புதிதாகப் பதவியேற்றிருக்கும் அரசின் உத்தரவாதத்தின் அடிப்படையில்தான் எமது முடிவு அமையும்.- என்றார்.

இவ்வேட்பாளர் அறிமுக நிகழ்வில் நாடாளுமன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களான புஸ்பராஜா தனுஷன், பாலசுந்தரம் சிறிபாலன், கிங்ஸ்லி ஜோர்ஜ் இராஜசிங்கம் மற்றும் கணபதிப்பிள்ளை பகீரதன் ஆகியோர் கலந்து கொண்டு தமது கருத்துக்களை முன்வைத்தனர்.





# ஆளுமையுள்ள இளம் அரசியல் தலைவரான பாரத் அருள்சாமியை நாடாளுமன்றம் அனுப்புக!

## மனோ கணேசன், ரவூப் ஹக்கீம் கூட்டாகத் தெரிவிப்பு

(க.கிஷாந்தன்)

அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் அரும்பாடுபட்டே கண்டி மாவட்ட தமிழ் நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் வென்றெடுக்கப்பட்டது. அதனை நாம் பாதுகாக்க வேண்டும். எனவே, ஆளுமையுள்ள இளம் அரசியல் தலைவரான பாரத் அருள்சாமியை ஆதரித்து நாடாளுமன்றம் அனுப்பி வையுங்கள.

இவ்வாறு தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

வேட்பாளர் பாரத் அருள்சாமியை ஆதரித்து கண்டி மஹியாவ மற்றும் குயின்ஸ் விருந்தகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரச்சாரத்தின் போது கலந்துக் கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு,

‘கண்டியில் எமக்கு எதிராக அன்று வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிட்டவர்கள் ஓடி ஒளிந்துக் கொண்டிருக்கின்றனர். இதனைத்தான் கர்மவினை என்பார்கள். நான் டீலர் அல்லர், லீடர். அதனால்தான் சவால் என தெரிந்தும் கண்டியில் களமிறங்கினேன். இன்றும் களத்தில் உள்ளேன்.

எனது கரங்கள் கறைபடியாத கரங்கள். எனவே கள்வர்கள் பட்டியலில் என்னையும் இணைக்க வேண்டாம் என அநுர தரப்பிடம் வலியுறுத்துகின்றோம். 225 பேரும் கள்வர்கள் எனக் கூறுபவர்களும் இதனைப் புரிந்துகொள்ள வேண்டும். ராஜபக்ஷ தரப்புடன் என்னைப் போன்றவர்களை ஒப்பிட வேண்டாம்.

பொதுத்தேர்தல் என்பது நமக்கான தேர்தல், நமது பிரதிநிதித்துவம் என்பது மிக முக்கியம். ஒரு இளம் வேட்பாளராக, ஆளுமையுள்ள அரசியல்வாதியாக நாம் பாரத் அருள்சாமியைக் கண்டி மாவட்டத்தில் களமிறக்கியுள்ளோம். நாம் ஐக்கிய மக்கள் சக்தியினர் அல்ல. ஐக்கிய மக்கள் கூட்டணியில் அங்கம் வகிக்கும் பங்காளிகள். எனவே, எமக்கான தனித்துவமும் உள்ளது. எனவே, ரவூப் ஹக்கீம், பாரத் அருள்சாமி போன்ற தமிழ் பேசும் அரசியல்வாதிகளின் வெற்றி மிக முக்கியம். கண்டியில் பாரத் மற்றும் ஹக்கீமுக்கு வழங்கும் மனோவுக்கு வழங்கப்படும் வாக்குகளாக நினைத்துக்கொள்ளுங்கள்.

தம்பி பாரத் சட்டத்தரணி, அரசியல் ஆளுமை மற்றும் நிதானம் உள்ளது. கட்சி தலைமை மற்றும் கொள்கைமீது உறுதியாக உள்ளார்.– என்றார்.

இதேவேளை, பாரத் அருள்சாமியிடம் சிறந்த ஆளுமைக்கு உரிய ஆற்றல் உள்ளது. அவர்போன்ற இளைஞர்கள் நிச்சயம் நாடாளுமன்றம் செல்ல வேண்டும் என்று ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

வேட்பாளர் பாரத் அருள்சாமியை ஆதரித்து கண்டி மஹியாவ மற்றும் குயின்ஸ் விருந்தகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரச்சாரத்தின் போது கலந்துக் கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு,

தனது தந்தையின் பெயரை பயன்படுத்தி அரசியல் செய்வதைவிட பாரத் அருள்சாமியிடம் சிறந்த ஆளுமை இருப்பதை நான் கூர்மையாக அவதானித்துவருகின்றேன்.

நல்ல திறமையான புதிய ஆளுமையை மனோ கணேசன் கண்டி மாவட்ட வேட்பாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளமை மகிழ்ச்சியளிக்கின்றது. அவருக்கு 34 வயதுதான் ஆகின்றது. நான் முதன்முதலில் நாடாளுமன்றம் சென்றபோது எனது வயதும் 34 தான்.

தற்போது நான் ஓய்வுபெறும் காலம் நெருங்கிக்கொண்டு வருகின்றது. பாரத் போன்ற ஒருவர் இம்மாவட்டத்தில் எனக்கு பிரதியீடாக வரவேண்டும் என எதிர்பார்க்கின்றேன். ஏனெனில் அவரிடம் ஆளுமைக்குரிய அம்சங்கள் உள்ளன.

என்னை போன்ற அரசியலுக்கு பரீட்சயமானவர்போலவே பாரத் செயற்பட்டுவருகின்றார். கண்டி மாவட்டத்துக்கு சிறந்த பொக்கிஷம் கிடைத்துள்ளது. முஸ்லிம் மக்களின் அபிலாஷைகளையும் அவர் அரவணைத்து செல்லக்கூடியவர். எனவே, அவரின் வெற்றிக்கு முஸ்லிம் மக்களும் கூடுதல் பங்களிப்பை செய்ய வேண்டும். – என்றார்.





# சிராஸ் மீராசாஹிபை ஆதரித்து சாய்ந்தமருதில் மகளிர் கருத்தரங்கு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் திகாமடுல்ல மாவட்டத்தில் கல்முனை தொகுதியில் மரச் சின்னத்தில் இலக்கம் 3 இல் போட்டியிடும் வெற்றி வேட்பாளர் கல்முனை மாநகர சபையின் முன்னாள் முதல்வர் கலாநிதி சிராஸ் மீராசாஹிபை ஆதரித்து சாய்ந்தமருது வெலிவோரியன் கிராமத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட மகளிர் கருத்தரங்கு நிகழ்வு (02) இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பெரும் திரளான பெண்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# இலங்கை சுபிட்சமுள்ள ஒரு நாடாக இருக்க வேண்டி கனவு கண்டார் சஜித்!

## வேட்பாளர் சமீம் தெரிவிப்பு

(எம். எப். றிபாஸ்)

சஜித் பிரேமதாஸ இந்த நாட்டு மக்களின் நலன்களின் மீது பெரும் அக்கறையுள்ள ஒருவர். இந்த நாடு பொருளாதாரத் தன்னிறைவடைந்து சுபிட்சமுள்ள நாடாகத் திகழ வேண்டும் என்பதை உண்மையாகக் கனவு கண்ட ஒரு தலைவர் அவர்.

இவ்வாறு திகாமடுல்ல மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பாக ஒன்பதாம் இலக்கத்தில் போட்டியிடும் வேட்பாளர் எஸ். எம்.சமீம் தெரிவித்துள்ளார்.

அக்கரைப்பற்றில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்று கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்தும் அங்கு அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

நீண்டகால அரசியல் அனுபவத்தைக் கொண்ட சஜித் பிரேமதாஸ இந்த நாட்டு அரசியல்வாதிகளில் கறை படியாத கரங்களைக் கொண்ட ஒரு தலைவராவார் இன மத பேதமற்ற, சமூக வேறுபாடுகளற்ற, பொய், களவு, ஊழலற்ற ஒரு நேர்மையான அரசியல்வாதியாகத் திகழ்ந்து வருகிறார்.

அதனால்தான் அதிக மக்கள் ஜனாதிபதித் தேர்தலில் கூட அவரை ஆதரித்து இருந்தனர். சொற்ப வாக்குகள் வித்தியாசத்தில் அவரால் ஜனாதிபதியாக முடியவில்லை என்றாலும்



அவர் இந்த நாட்டு நலன் மீது அதிக கரிசனையோடு செயல்படுபவராகவே இருந்து வருகிறார்.

சிறந்த அரசியல் பின்புலத்தைக் கொண்ட ஒரு தலைவரின் கீழ் ஐக்கிய மக்கள் சக்தி சார்பாக நாடு முழுவதும் அதிகளவானோர் தேர்தலில் போட்டியிடுகின்ற நிலையில் அதிகளவான ஆசனங்களை கைப்பற்றக் கூடிய வாய்ப்பு அதிகம் உள்ளதாக அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். இந்த அடிப்படையில் திகாமடுல்ல மாவட்டத்திலும் ஐக்கிய மக்கள் சக்தி சார்பாக டெலிபோன் சின்னத்தில் நாங்கள் போட்டியிட்டு வருகின்றோம்.

திகாமடுல்ல மாவட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் தனித்துப் போட்டியிட்டாலும் ஏனைய பல மாவட்டங்களில் அவர்கள் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து போட்டியிடுகின்றனர். இவ்விரு கட்சிகளின் தலைவர்களும் அவரவர்களுடைய மாவட்டத்தில் றெலிபோன் சின்னத்திலேயே போட்டியிடுகின்றனர். அதனால் அவர்கள் ஒருபோதும் டெலிபோன் சின்னத்துக்கு வாக்களிக்க கூடாது என்று கூறுவது நேர்மையான அரசியலாக அமையாது.

வாக்காளர்களாகிய பொது மக்கள் இது தொடர்பாகச் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இந்தக் கட்சிகளின் தலைவர்கள் வேறு மாவட்டங்களில் ஐக்கிய மக்கள் சக்தியின் சின்னத்தில் போட்டியிடுகின்ற அதேவேளை அம்பாறை மாவட்டத்திலுள்ள வாக்காளர்களை ஐக்கிய மக்கள் சக்திக்கு வாக்களிக்க கூடாது என்று பிரச்சாரம் செய்வது தார்மீகமாக அமையாது.

எனவே வாக்காளர்கள் தங்களுடைய பெறுமதியான வாக்குகளை எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் அதிகப் படியான ஆசனங்களை வெல்லக்கூடிய ஐக்கிய மக்கள் சக்திக்கும், றெலிபோன் சின்னத்துக்கும் வாக்களிப்பதன் மூலம் தங்களது பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

இதன் அடிப்படையில் றெலிபோன் சின்னத்தில் இலக்கம் ஒன்பதில் போட்டியிடும் எனக்கும் உங்களுடைய பெறுமதியான வாக்குகளையிட்டு எனது வெற்றிக்கும் பங்களிப்பு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.– என்றார்



# ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் காரைதீவுக் அலுவலகம் திறப்பு விழா

**(வி.ரி.ர் சகாதேவராஜா)**

சங்கு சின்னத்தில் போட்டியிடும் ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணியின் திகாமடுல்ல மாவட்டத்தின் காரைதீவுப் பிரதேசத்துக்கான அலுவலகம் காரைதீவு பிரதான வீதியில் நேற்று முன்தினம் (02) சனிக்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வானது தலைமை வேட்பாளர் சபாபதி நேச ராசா தலைமையில் இடம்பெற்றது .

நிகழ்வில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி வேட்பாளர்களான இரா.பிரகாஷ் (சிவில் சமூக செயற்பாட்டாளர்), கி .லிங்கேஸ்வரன் (தலைவர் – கல்முனை வர்த்தக சங்கம்) , இ.துரைசிங்கம்( சிவில் சமூக செயற்பாட்டாளர்) ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும் கட்சி பிரமுகர்களான ஹென்றி மகேந்திரன் (ரெலோ), சங்கரி(புளட்) , முன்னாள் திருக்கோவில் தவிசாளர் இ.வி.கமலராஜன் உள்ளிட்ட கட்சி ஆதாரவாளரர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.



# நல்ல தலைவர்களையும் சேவை செய்வோரையும் தேர்தலில் தெரிவு செய்ய வேண்டியது அவசியம்!

## மக்கள் காங்கிரஸ் வேட்பாளர் சபீஸ் தெரிவிப்பு

(எம்.ஏ.றமீஸ்)

நாடாளுமன்றத் தேர்தல் என்பது நல்ல தலைவர்களையும் சேவை மனப்பாங்கு உள்ளவர்களையும் தெரிவு செய்யும் தேர்தலாகும். இந்தத் தேர்தலில் பிரதேச வாதம் பார்த்து வாக்குகள் சிதறடிக்கப்படுமாக இருந்தால் நல்ல தலைவர்களை உருவாக்கிக் கொள்ள முடியாத நிலை தோன்றும். இதனை நன்கு புரிந்து கொண்டு மக்கள் வாக்களிப்பில் ஈடுபட வேண்டும்.

இவ்வாறு திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர் எஸ்.எம்.சபீஸ் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று பிரதேசத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

தற்கால சூழ்நிலையில் தேர்தலை மையப்படுத்தி பல்வேறு பிரதேசங்களில் பல்வேறு பிரதேச வாதங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. ஒவ்வொரு கிராமத்தவர்களும் தமது பிரதேசங்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் தேவை என்ற கோசம் விதைக்கப்பட்டுள்ளது.

பிரதேச வாதத்தை விதைத்து கோசங்களை எழுப்புவதனால் நாம் நல்ல நாடாளுமன்ற உறுப்பினரை தெரிவு செய்ய முடியாமல் போய்விடும். அம்பாறை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் இருபதுக்கு மேற்பட்ட கிராமங்கள் இருக்கின்றன. இம்மாவட்டத்தில் மூன்று முஸ்லிம்கள் மாத்திரமே எமது பிரதிநிதிகளாக தெரிவு செய்யப்படுபவர்களாக இருந்தால் எப்படி ஒவ்வொரு கிராமத்துக்கு ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினரை தெரிவு செய்ய முடியும்.



நாம் நிம்மதியாக வாழ வேண்டுமாக இருந்தால், நல்ல அரசியல் கலாசாரமும், சிறந்த தலைவர்களும் உருவாக்கப்பட வேண்டும். முறையான கல்வித் திட்டம் இந்த நாட்டில் கொண்டு வரப்பட வேண்டும். நல்ல கல்வித் திட்டம் இந் நாட்டில் கொண்டுவரப்படாவிட்டால் நமது இளம் சமூதாயத்தினரை நிம்மதியாக வாழ வைக்க முடியாத நிலை ஏற்படும். இந்நாட்டில் உள்ள மாணவர்களின் திறமைக்கு ஏற்ப அவர்களுக்கு உயர்கல்வியினையும், பட்டப் படிப்பினையும் வழங்குவதற்கு கல்விக் கொள்கைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும். மேலைத்தேய நாடுகளைப் போல் ஆசிரியர்களுக்கு உயர்வான ஊதியம் வழங்கப்பட வேண்டும். அப்போதுதான் மாணவர்களுக்கு ஆசிரியர்கள் ஆர்வத்தோடு கற்பிப்பார்கள்.

நமது அம்பாறை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் விவசாயச் செய்கைக்கு பெயர் பெற்றதும், அதிக வருமானத்தைப் பெற்றுத் தரும் துறையாக விவசாயமும், கடல் வளமும் காணப்படுகின்றன. இந்தத் துறைகளின்பால் மேலும் நமது கவனத்தைச் செலுத்தினால் அதிகளவான வருமானத்தை முறையாகவும் தொடர்ச்சியாகவும் பெற்றுக் கொடுக்கக் கூடிய வழி முறைகளை ஏற்படுத்த முடியும்.

வருடத்தில் இரண்டு போகங்கள் செய்கை பண்ணும் விவசாயச் செய்கையை மூன்று முறை மேற்கொள்வதற்கானதும், குறுகிய காலப் பகுதிக்குள் கூடிய விளைச்சலைப் பெற்றுத் தரும் நெல்லினங்கள் மற்றும் விவசாய முறைமைகள் போன்றன மாற்றியமைக்கப்பட வேண்டும். பெருமளவு விவசாயம் நிலம் இந்த மாவட்டத்தில் காணப்படுகின்றது. சிறந்த விவசாயிகள் இங்கு இருக்கின்றார்கள். ஆனால் எம்மால் உச்சப் பயனை இந்தத் துறை மூலம் பெற்றுக் கொள்ள முடியாமல் உள்ளது.

நமது நாட்டைச் சுற்றிவர பாரிய கடல் வளம் காணப்படுகின்றது. நாம் இன்னும் ரின் மீன்களை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்து கொண்டிருக்கின்றோம். பாரிய ரின்மீன் தொழிற்சாலைகள் உள்ளிட்ட பல்வேறு தொழிற்சாலைகளை நிறுவி அதில் தொழில் வாய்ப்புகளையும், அதிக வருமானம் ஈட்டும் துறையாகவும் கடல் வளத்தை நாம் பயன்படுத்த வேண்டும். கடல்வளத்தினை வைத்து மேலைத்தேய நாட்டு மக்கள் எவ்வாறு தத்தமது நாடுகளை வளம் கொளிக்க வைத்துள்ளார்கள் என்று நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இந்நாட்டில் உள்ள அனைத்து துறைகளையும் விருத்தியடையச் செய்து மேலைத்தேய நாடுகளிடம் கையேந்தும் கலாசாரத்தை முற்றுப் பெறச் செய்ய வேண்டுமாக இருந்தால் இளம் சமூதாயத்தினரின் வாழ்வில் ஒளியேற்றப்பட வேண்டும். அவர்கள் நாட்டம் கொண்ட நல்ல துறைகளுக்கு ஏற்ப கல்விக் கொள்கைகள் வகுக்கப்பட்டு பல்கலைக்கழகங்கள் மூலமாகவும், தொழிற்கல்வி நிறுவனங்கள் மூலமாகவும் நுட்பங்களைக் கற்பித்து பட்டங்களை வழங்குவதன் மூலம் ஒவ்வொரு தொழில் துறைகளும் விஸ்தீரணம் அடையும். அப்போது அனைத்து துறைகள் மூலமும் பாரிய வருமானம் ஈட்டக் கூடிய நிலை எமது நாட்டில் தோற்றம் பெறும்.- என்றார்.

# யுத்தத்தில் உயிரிழந்த மக்களுக்கு எனது செலவில் நினைவுத் தூபி!

## அமைக்கத் தயார் என்கிறார் அங்கஜன் இராமநாதன்

(த.சுபேசன்)

உள்நாட்டு யுத்தத்தில் உயிரிழந்த மக்களுக்கு எனது சொந்தச் செலவில் நினைவுத்தூபி அமைக்கத் தயார் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

நீண்ட கால உள்நாட்டு யுத்தத்தால் நாட்டு மக்கள் பலரை இழந்து விட்டோம்.

இனங்களுக்கிடையே புரிந்துணர்வு இன்மை மற்றும் சம உரிமை கிடைக்காமை உள்ளிட்ட காரணங்களால் உள்நாட்டு யுத்தம் உருவாகி அது பலரையும் காவு கொண்டு விட்டது.



இந்த யுத்தத்தால் தமிழ் மக்களே அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

யுத்தம் மௌனித்து 15வருடங்கள் கடந்து விட்ட போதிலும் தமிழ் மக்கள் யுத்த வடுவில் இருந்து மீள முடியாமல் உள்ளனர்.

அத்தோடு தமிழ் மக்களுக்கு உறவுகளை நினைவு கூர்வது கூட சவால் நிறைந்த ஒன்றாகவே காணப்படுகிறது.

இந்த நிலையில் பொதுவான நினைவுத்தூபி ஒன்றை அமைத்து யுத்தத்தில் உயிரிழந்த அனைவருக்கும் அஞ்சலி செலுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அவ்வாறு அரசு அனுமதி வழங்கும் பட்சத்தில் எனது சொந்தச் செலவில் பொதுவான நினைவுத் தூபியை நிறுவி நாட்டில் நல்லிணக்கத்தை மலரச் செய்வது சிறந்த ஆரோக்கியமான எதிர்கால சந்ததியை உருவாக்கும்.- என்றார்.

# விஜய்யின் அடுத்த செயல்பாடுகளை உன்னிப்பாக கவனிக்கிறது தி.மு.க.



த.வெ.கவின் முதல் மாநாட்டில் நடிகர் விஜய்யின் பேச்சு மற்றும் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்களில் விமர்சனங்கள் வைக்கப்பட்ட போதிலும், நேரடியாக பதிலளிக்காமல் நடிகர் விஜய்யின் அடுத்தடுத்த செயல்பாடுகளை உன்னிப் பாக தி.மு.க. கவனித்து வருவதாக கூறப்படுகிறது.

தமிழகத்தில் ஆளும் தி.மு.க, அடுத்த சட்டப்பேரவை தேர்தலுக்கு கடந்த பல மாதங்களுக்கு முன்பிருந்தே தயாராகி வருகிறது. அடுத்து வரும் 2026 ஆம் ஆண்டு தேர்தலில் 200 தொகுதிகளை இலக்காக வைத்து களம் காண, முதல்வர் மு.க.ஸ்டாலினும், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினும் கட்சியினரை அவ்வப்போது சந்தித்து உற்சாகப்படுத்தி வருகின்றனர்.

கடந்த 2021 சட்டப்பேரவைத் தேர் தல், சமீபத்தில் நடைபெற்று முடிந்த மக்களவைத் தேர்தல் என இரண்டு மட்டுமின்றி, முன்னதாக நடைபெற்ற பல்வேறு தேர்தல்களில் தி.மு.க. தமிழகத்தில் தனது இருப்பை அழுத்த மாக நிரூபித்து காட்டியுள்ளது.

பிரதான எதிர்க்கட்சியான அ. தி.மு.கவின் பலவீனத்தையும், தங்கள் கூட்டணியின் பலத்தையும் நம்பியே அடுத்த தேர்தலை எதிர்கொள்ள தி.மு.க. தயாராகி வந்தது.

இந்நிலையில்தான், சமீபத்தில் நடிகர் விஜய் தனது தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் மாநில மாநாட்டை நடத்தினார். இம்மாநாட்டில், நடிகர் விஜய் நேரடியாகவே தி,மு,கவை விமர்சித்ததுடன், தி,மு,கதான் தனது அரசியல் எதிரி என்பதையும், திராவிட மொடலை குறிப்பிட்டு பேசினார். கொள்கை அளவில் பா.ஜ.கவை எதிர்ப்ப தாகவும் தெரிவித்தார்.

மேலும், ஆட்சியில் பங்கு குறித்து தி.மு.க. கூட்டணிக் கட்சிகள் மத்தியில் சமீபத்தில் சலசலப்பு ஏற்பட்ட நிலையில், தங்களுடன் கூட்டணி வைத்தால் ஆட்சி, அதிகாரத்தில் பங்கு என விஜய் அறிவித் தது அரசியல் வட்டாரத்தில் பேசுபொரு ளாக மாறியது. ஆனால், அமைச்சர் எஸ்.ரகுபதி உள்ளிட்ட சிலரைத் தவிர தி.மு.கவின் வேறு முக்கியத் தலைவர் கள் யாரும் பெரிய அளவில் விஜய் விமர்சனத்துக்கு எதிர்வினையாற்ற வில்லை. அதன்பின் நடைபெற்ற தி.மு.க. தேர்தல் பார்வையாளர்கள் கூட்டத்திலும், நடிகர் விஜய் விமர்சனம் குறித்து யாரும் பேச வேண்டாம், நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் என்று முதல்வர் ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி ஆகியோர் கூறிவிட்டதாகவும், அதனால் யாரும் இதுகுறித்து பேசமாட் டோம் என்றும் நிர்வாகிகள் தெரிவித்து விட்டனர்.

ஆனால், அதன்பின் நேற்று நடை பெற்ற த.வெ.கவின் செயற்குழு கூட்டத் திலும், அரசின் பழிவாங்கும் நடவ டிக்கை, மக்கள் விரோத சக்திகள் பயன் படுத்தும் அணுகுமுறையை ஆளும் திமுக உள்ளிட்ட யார் செயல்படுத்தினா லும் த.வெ.க. எதிர்ப்பதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந் நிலையில், தி.மு.கவின் அடுத்த கட்ட நடவடிக்கை என்னவாக இருக்கும் என்பது குறித்து தி.மு.க. நிர்வாகிகள் குறிப்பிடுகையில்,

“தி.மு.கவுக்கு முக்கியமான எதிரி தமிழகத்தில் அ.தி.மு.கதான். விஜய் தற்போது முதல் மாநாட்டை நடத்தியுள் ளார். அதன்பின் செயற்குழு கூட்டத்தை யும் நடத்தியிருக்கிறார். அவரது அடுத் தடுத்த செயல்பாடுகளைப் பார்த்துதான் தலைமை எதிர்வினையாற்றும். இப்போ தைய சூழலில், கட்சியின் கட்டமைப்பை வலுப்படுத்தும் முயற்சியில் தலைமை இறங்கியுள்ளது.

முதல்வரும், துணை முதல்வரும் தங்கள் சுற்றுப்பயணங்கள் மூலம் அரசு நிகழ்ச்சிகளில் பங்கேற்றுவிட்டு, நிர்வாகிகளையும் சந்தித்து ஆலோ சனை நடத்துகின்றனர். அதன்பின், டிசம்பர் இறுதி அல்லது ஜனவரி மாதத் தில் கட்சியின் நிர்வாக ரீதியான மாவட் டங்களில் பெரிய அளவில் மாற்றம் இருக்கும். “ – என்றனர்.

# தி.மு.க. அரசுக்கு கண்டனம் தெரிவித்து த.வெ.க. செயற்குழுவில் தீர்மானங்கள்



சாதிவாரி கணக்கெடுப்பு, நீட் தேர்வு, வரிகளை உயர்த் தியது, போதைப் பொருள் புழக்கம் உள்ளிட்ட விவகாரங்களில் தி.மு.க. அரசுக்கு கடும் கண்டனம் தெரிவித்து த.வெ.க. செயற்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சென்னை பனையூரில் உள்ள த.வெ.க. தலைமை அலுவலகத்தில் செயற்குழு மற்றும் மாவட்ட நிர்வாகிகள் கூட்டம் நேற்று நடந்தது. பொதுச் செயலாளர் ஆனந்த், பொருளாளர் வெங்கட்ராமன், கொள்கை பரப்பு இணை செயலாளர் தாகிரா உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் பங்கேற்றனர்.

இந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் விவரம்:-

மத்திய அரசின் ஒரே நாடு, ஒரேதேர்தல் அறிவிப்புக்கு கண்டனம். வக்பு வாரிய சட்ட திருத்த மசோதாவை திரும்ப பெற வேண்டும். நீட் தேர்வுக்கு விலக்கு அளிக்கும் வகையில் கல்வியை மாநில பட்டியலுக்கு கொண்டுவர வேண்டும்.

பரந்தூர் விமான நிலையம் அமைக்க கூடாது. இந்த விவகாரத்தில் போராட தயங்கமாட்டோம். நெய்வேலியில் நிலக்கரி சுரங்கம்அமைக்க விவசாயிகள் ஒப்புதலின்றி நிலத்தை கையகப்படுத்த கூடாது. கோவையில் மெட்ரோ ரயில்பணிகளை தொடங்க மத்திய அரசை வலியுறுத்துகிறோம். மூன்றாவது மொழியை திணிக்கும் மத்திய அரசின் கனவு எந்த காலத்திலும் நிறைவேறாது.

எதிர்க்கட்சியின் செயல்பாடுகளை முடக்கும் அணுகு முறையை தி.மு.க. ஆட்சியாளர்கள் உட்பட யார் செயல்படுத்தினாலும் கடுமையாக எதிர்க்கிறோம். சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தாமல், சமூகநீதியின் பாதையில் பயணிக்கிறோம் என்று திமுக அரசு கூறி வருவதை மக்கள் நம்பமாட்டார்கள். மத்திய அரசு மீது பழிபோட்டு தப்பிக்க நினைக்கும் முயற்சி பலிக்காது. உண்மையான சமூக நீதியைநிலைநாட்ட சாதிவாரி கணக்கெடுப்புக்கு தமிழக அரசு ஆய்வு நடத்த வேண்டும். நீட் விவகாரத்தில் பொய் வாக்குறுதிகளை அளித்து தமிழக மக்களை ஏமாற்றும் தி.மு.க. அரசை எதிர்க்கிறோம் உள்ளிட்ட 26 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.





### நைஜீரியாவில் அரசுக்கு எதிரான போராட்டம்:

# சிறுவர்கள் 29 பேருக்கு மரண தண்டனைக்கு வாய்ப்பு

நைஜீரியாவில் கடும் பொருளாதார நெருக்கடி நிலவி வருகிறது. பணவீக்கம் உச்சம் தொட்டுள்ளதால், மக்கள் அத்தியாவசியப் பொருள்களை வாங்க முடியாத சூழலில் உள்ளனர்.

இந்நிலையில், வாழ்வாதாரத்தை மேம்படுத்தக் கோரி, நைஜீரிய இளைஞர்கள் அந்நாட்டுக்கு எதிராக தீவிர போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர். போராட்டங்களில் ஈடுபடுபவர்கள் மீது நைஜீரிய அரசு கடும் நடவடிக்கை எடுத்து வருகிறது.

கடந்த ஓகஸ்ட் மாதத்தில் போராட்டக்காரர்கள் மீது பொலிஸ் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 20 பேர் உயிரிழந்தனர். 100 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில், அரசுக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்ட 29 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்படலாம் என்று தகவல் வெளியாகியுள்ளது. இவர்கள் அனைவரும் 14 வயது முதல் 17 வயதுக்குட்பட்ட சிறார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் மீது தேசத் துரோகம், கலவரத்தைத் தூண்டுதல் உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். நைஜீரியாவில் 1970 களில் மரண தண்டனை அறிமுகம் செய்யப்பட்டது. ஆனால், 2016 முதல் மரணதண்டனை எதுவும் நிறைவேற்றப்படவில்லை. இந்நிலையில் குழந்தைகள் உரிமைப் படி, 18 வயதுக்குட்பட்ட சிறார்களுக்கு மரண தண்டனை வழங்க முடியாது என்று வழக்கறிஞர் அகிந்தயோ பலோகுன் தெரிவித்துள்ளார்.





# இஸ்ரேல் மீது மிகப்பெரிய தாக்குதல்: ஈரானின் மதத் தலைவர் எச்சரிக்கை

இஸ்ரேல் மீது மிகப்பெரிய தாக்குதல் நடத்தப்படும் என்று ஈரான் மதத் தலைவர் அயத்துல்லா அலி கமேனி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதைத் தொடர்ந்து இஸ்ரேலின் பாதுகாப்புக்காக அமெரிக்காவின் யு.எஸ். பி-52 ரக போர் விமானங்கள் மத்திய கிழக்கில் நிலைநிறுத்தப்பட்டு உள்ளன.

கடந்த ஒக்டோபர் 1 ஆம் திகதி இஸ்ரேல் பகுதிகளை குறிவைத்து ஈரான் இராணுவம் 200 ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தியது. இதற்கு பதிலடியாக கடந்த 26 ஆம் திகதி இஸ்ரேலின் 100 போர் விமானங்கள் ஈரானின் இராணுவ தளங்கள், ஆயுத உற்பத்தி ஆலைகள் மீது குண்டுகளை வீசின.

இந்த சூழலில் ஈரான் மதத் தலைவர் அயத்துல்லா அலி கமேனி சமூக வலைதளத்தில் நேற்று முன்தினம் வெளியிட்ட பதிவில், "ஈரான் மற்றும் எதிர்ப்பு படைகள் (ஹமாஸ், ஹிஸ்



புல்லா) மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்காக அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுக்கு தகுந்த பதிலடி கொடுக்கப்படும்" என்று எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இஸ்ரேல் மீது மிகப்பெரிய தாக்குதலை நடத்த ஈரான் இராணுவத்துக்கு மதத் தலைவர் அயத்துல்லா அலி கமேனி உத்தரவிட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கு முன்பாக தாக்குதல் நடத்தப்படும் என்றும் கூறப்படுகிறது.

இதுதொடர்பாக ஈரான் இராணுவத்தின் ஐ.ஆர்.ஜி.சி. படைப்பிரிவின் தலைவர் ஹுசைன் சலாமி குறிப்பிடுகையில்,

"சர்வதேச அராஜகத்துக்கு எதிராக ஈரான் போராடி வருகிறது. அமெரிக்காவும் இஸ்ரேலும் இறுதி காலத்தை நெருங்கிவிட்டன. வாஷிங்டன் (அமெரிக்கா), டெல் அவிவ் (இஸ்ரேல்) தலைமைக்கு தகுந்த நேரத்தில் தகுந்த பாடம் கற்பிக்கப்படும்.

காசா, லெபனானில் மனித உரிமைகள் அப்பட்டமாக மீறப்பட்டு வருகின்றன. இதை அமெரிக்க அரசு கண்டுகொள்வது கிடையாது. ஆனால் சர்வதேச அளவில் ஜனநாயகம் குறித்தும் மனித உரிமைகள் குறித்தும் அந்த நாடு குரல் எழுப்புகிறது. இது வேடிக்கையாக இருக்கிறது. "- என்றார்.

ஈரானின் மிரட்டலை தொடர்ந்து இஸ்ரேலின் பாதுகாப்புக்காக அமெரிக்காவின் யுஎஸ் பி-52 ரக போர் விமானங்கள் மத்திய கிழக்கில் நிலைநிறுத்தப்பட்டு உள்ளன. இந்த வகை போர் விமானங்கள், அணு குண்டுகளை வீசும் திறன் கொண்டவை ஆகும்.

கனடா முரசு

பக்கங்கள் 03

திங்கட்கிழமை 04/11/2024

## கனடாவின் ஒன்றாரியோவில் அறிமுகமாகும் நேரமாற்றம்

கனடாவின் ஒன்றாறியோ மாகாணத்தில் நேற்று முதல் நேரமாற்றம் அறிமுகமானது.

பகல் நேரத்தை சேமிக்கும் வகையில் இந்த நேரமாற்றம் அறிமுகம் செய்யப்பட்டது. 02



# தீபாவளி கொண்டாடினார் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ

கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அந்த நாட்டில் வாழும் இந்தியாவைச் சேர்ந்த இந்து மதத்தினருடன் சேர்ந்து தீபாவளி கொண்டாட்டங்களில் ஈடுபட்டுள்ளார்.

இதுதொடர்பான காணொலி இணையத்தில் வைரலாகி வருகிறது.

கடந்த சில மாதங்களில் தான் மூன்று இந்து கோவில்களுக்கு சென்றதாகவும் அங்கு தனது அதிஷ்டத்துக்காக கையில் அன்புடன் கயிறு கட்டி விடப்பட்டதாகவும் அதுவாக கழன்று விழும்வரை தான் அவற்றை அவிழ்க்கப்போவதில்லை என்றும் தனது சமூக வலைதள பக்கத்தில் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

02













# டொரன்டோ திரையரங்கில் பதற்ற நிலை ஏற்பட்டது

கனடாவின் டொரன்டோ பகுதியில் அமைந்துள்ள திரையரங்கு ஒன்றில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

இனம் தெரியாத பொருள் ஒன்றை இரண்டு நபர்கள் எரித்தனர் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவம் காரணமாக திரையரங்கில் இருந்தவர்கள் அவசர அவசரமாக பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டுள்ளனர்.

டொரன்டோவின் வுட்சைட் சதுக்கத்தில் இந்த சம்பவம் பதிவாகியுள்ளது.

தீ உடனடியாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாகவும் இதனால் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவ இடத்திற்கு குண்டு செலிழிக்கும் பிரிவினர் அழைக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய இருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.சந்தேக நபர்களிடம் விசாரணை முன்னெடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.









## தீபாவளி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

“இந்த ஒளி மிகுந்த பண்டிகையில் இருள் அழிய வேண்டும். கனடாவில் வாழும் இந்து மக்கள் சிறத்தவர்கள். நவம்பர் மாதம் இந்து மத காலாச்சார மாதமாக கனடாவில் கொண்டாடப்படுகிறது.

கனடா இந்துக்களுக்கு நாங்கள் எப்போதும் உறுதுணையாக நிற்போம்.” என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையே, கனடாவில் உள்ள இந்திய தூதரகத்தில் நடக்க இருந்த தீபாவளி நிகழ்ச்சிகளை இந்திய வெளியுறவுத்துறை ரத்து செய்தது குறிப்பிடத்தக்கது.

## கனடாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்படி இன்று ஒன்றாறியோ மாகாணத்தில் கடிகாரங்கள் ஒரு மணித்தியாலம் பின்னோக்கி நகர்த்தப்பட்டன.

இதன்படி, நேற்று அதிகாலை இரண்டு மணிக்கு கடிகாரங்களை ஒரு மணித்தியாலம் பின் நோக்கி நகர்ந்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நேரமாற்றம் தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் முன் வைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# தொலைபேசி உரையாடல் ஒட்டு கேட்பு; இந்திய தூதரக அதிகாரிகள் குற்றச்சாட்டு

கனடாவில் இந்திய தூதரக அதிகாரிகளின் தொலைபேசி உரையாடல்கள் ஒட்டுக்கேட்கப்படுவதாக இந்திய வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் ரன்தீர் ஜெய்ஸ்வால் குற்றம்சாட்டியுள்ளார்.

காலிஸ்தான் பிரிவினைவாதியான ஹர்தீப் சிங் நிஜ்ஜார், கடந்த ஆண்டு ஜூன் மாதம் கனடாவில் கொலை செய்யப்பட்டார். இதற்கு இந்திய அரசு உதவியதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றம்சாட்டியதால், இரு நாடுகளிடையே மோதல் நீடித்து வருகிறது.

இந்நிலையில், கனடாவில் உள்ள காலிஸ்தான் அமைப்பினரை குறிவைத்து வன்முறை, உளவுத் தகவல் சேகரிப்பு உள்ளிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா உத்தரவிட்டார் என்று கனடா வெளியுறவு துறை துணை அமைச்சர் டேவிட் மோரிசன் அண்மையில் குற்றம்சாட்டியிருந்தார்.

இதற்கு இந்திய அரசு கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளது. கனடாவின் இந்த குற்றச்சாட்டு அபத்தமானது மற்றும் ஆதாரமற்றது என்றும் கூறியுள்ள இந்திய வெளியுறவுத்துறை அமைச்சக செய்தித் தொடர்பாளர் ரன்தீர் ஜெய்ஸ்வால், இந்த விவகாரத்தில் கனடா தரப்பின் விளக்கத்தை தெரிவிக்குமாறு அந்த நாட்டு தூதரக அதிகாரிக்கு அழைப்பாணை அனுப்பியுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதனிடையே, கனடாவில் இந்திய தூதரக அதிகாரிகளின் தொலைபேசி உரையாடல்கள் ஒட்டுக்கேட்கப்படுவதாக இந்திய வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் ரன்தீர் ஜெய்ஸ்வால் குற்றம்சாட்டியுள்ளார்.

டில்லியில் செய்தியாளர்களை சந்தித்த அவர், கனடா அரசின் செயல்களுக்கு கடும் கண்டனம் தெரிவித்தார்.




# வங்கி வாடிக்கையாளர்களை பாதுகாக்க புதிய நடைமுறை

கனடாவில் வங்கி மோசடிகள் முறைப்பாடுகளை கையாளுகை தொடர்பில் புதிய நடைமுறை அறிமுகம் செய்யப்பட உள்ளது.

வங்கிகளில் வாடிக்கையாளர்கள் மோசடிகளில் சிக்கும் போது அவர்களை பாதுகாக்கும் வகையில் சில மாற்றங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

கடந்த முதலாம் திகதி தொடக்கம் கனடாவின் பிரதான வங்கிகளில் இந்த மாற்றம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

வங்கிகள், நியாயமான முறையில் வாடிக்கையாளர்களுக்கு சேவை வழங்கக்கூடிய வகையில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வங்கி வாடிக்கையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலான முறைப்பாடுகளை கையாளும் போது பிரதான வங்கிகள் மூன்றாம் தரப்பு குறைகள் அதிகாரி ஒருவரின் சேவைகளையே பெற்றுக் கொண்டது.

எனினும் இந்த நடவடிக்கையானது ஒரு பக்க சார்பானது என குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

இதனை தொடர்ந்து வங்கி சேவை மற்றும் முதலீடுகள் தொடர்பான குறைகேள் அதிகாரியின் கேள்விகளுக்கு பதில் அளிக்க வேண்டியது அவசியம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் வங்கி வாடிக்கையாளர்கள் பாதுகாக்கப்படுவர் என தெரிவிக்கப்படுகின்றது.